வாழ்த்து

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், வேலூர் மாநகராட்சி மன்ற தொகுதி உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த் தனது பிறந்த நாளையொட்டி சென்னை 'முகாம் அலுவலகத்தில் தி.மு.க. தலைவரான முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அஜந்தா - எல்லோரா சர்வதேச திரைப்பட விழா:

இளையராஜாவுக்கு பத்மபாணி விருது அறிவிப்பு

மும்பை, ஜன.20-

இந்தியாவில் நடக்கும் சர்வதேச திரைப்பட விழாக்களில், மராட்டிய மாநிலம் சத்ரபதி சம்பாஜிநகரில் நடைபெறும் அஜந்தா - எல்லோரா சர்வதேச திரைப்பட விழா முக்கியமானதாகும். அந்த வகையில் 11-வது அஜந்தா - எல்லோரா சர்வதேச திரைப்பட விழா வருகிற 28-ந்தேதி தொடங்கி, பிப்ரவரி 4-ந்தேதி வரை நடக்கிறது.

இளையராஜா

இதில் உயரிய விருதான, வாழ்நாள் சாதனையாளருக்கான 'பத்மபாணி விருது' இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. திரைப்பட விழாவின் தொடக்க விழாவில் இளையராஜாவுக்கு இந்த விருது வழங்கப்பட இருக்கிறது.

பத்மபாணி விருதை இதற்கு முன்பு பாடலாசிரியர் ஜாவேத் அக்தர், எழுத்தாளர் சாய் பரஞ்ஜ்பை, நடிகர் ஓம் புரி உள்ளிட்டோர் பெற்றுள்ளனர். 8 நாட்கள் நடைபெறும் விழாவில் கிட்டத்தட்ட 70 படங்கள் திரையிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இளையராஜா தனது 50 ஆண்டுகளுக்கும் மேலான இசைப் பயணத்தில் 1,500-க்கும் மேற்பட்ட படங்களுக்கு, 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இசையமைத்துள்ளார். சாதனைகளின் உச்சமாய் லண்டனில் சிம்பொனி இசைத்து உலகரங்கில் தமிழராய் கவனம் ஈர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லியில் 26-ந்தேதி குடியரசு தின விழா:

தேனி பழங்குடியின தம்பதி உள்பட 10 ஆயிரம் சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு

புதுடெல்லி, ஜன.20-

டெல்லியில் 26-ந்தேதி நடைபெறும் குடியரசு தின விழா அணிவகுப்பை காண தேனி பழங்குடியின தம்பதி உள்பட 10 ஆயிரம் சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

77-வது குடியரசு தின விழா

இந்தியாவின் 77-வது குடியரசு தின விழா வருகிற 26-ந்தேதி கொண்டாடப்படுகிறது. டெல்லியில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க சாலையான கடமைப்பாதையில் கொண்டாடப்படும் குடியரசு தின விழா சிறப்புவாய்ந்தது. இவ்விழாவில், ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டு தலைவர்கள் பங்கேற்பது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டு ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டா சான்டோஸ் டா கோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். 27-ந்தேதி நடைபெறும் 16-வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டிலும் இவர்கள் பங்கேற்கிறார்கள்.

தேனி பழங்குடியின தம்பதி

இதுதவிர 10 ஆயிரம் பேர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கிறார்கள் என மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது. தேனி மாவட்டம் அகமலை ஊராட்சி சொக்கன் அலை மலைக்கிராமத்தை சேர்ந்த கண்ணன் (வயது 44), அவருடைய மனைவி கனகா ஆகியோர் தமிழகத்தில் இருந்து பங்கேற்க அழைக்கப்பட்டு உள்ளனர்.

அவர்கள் பனியர் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள். இதில் கண்ணன் தேனி மாவட்ட பனியர் பழங்குடியின தலைவராகவும், சொக்கன் அலை கிராம வனக்குழு தலைவராகவும் உள்ளார்.

உலக நடனக் பாரா சாம்பியன்ஷிப் வெற்றியாளர்கள், இயற்கை விவசாயிகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மக்காச்சோளம் போன்ற பயிர்சாகுபடியில் சிறந்த செயல்திறன் கொண்ட விவசாயிகள், கல்யாண், சந்திரயான் போன்ற இஸ்ரோ திட்டங்களில் ஈடுபட்ட விஞ்ஞானிகள்,

மருத்துவம், தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், பெண் தொழில்முனைவோர் போன்றோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

முக்கிய இடங்களை பார்வையிடுகிறார்கள்

இதேபோன்று விண்வெளி, மருத்துவம் போன்ற துறைகளில் சிறப்பாக செயல்படும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் உரிமையாளர்கள், மத்திய அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களின் தலைவர்கள், முத்ரா திட்டத்தில் கடன் பெற்ற பெண் தொழில்முனைவோர் உள்ளிட்டோரும் இந்த விழாவில் பங்கேற்கிறார்கள்.

இந்த சிறப்பு விருந்தினர்கள் குடியரசு தின விழா கொண்டாட்டங்களுக்கு பிறகு தேசிய போர் நினைவுச்சின்னம், பிரதமர் சங்ராலயம் மற்றும் டெல்லியில் உள்ள பிற முக்கிய இடங்களை பார்வையிட அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

குடியரசு தின கொண்டாட்டத்துக்கான அணிவகுப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது.

ரூ.72½ லட்சம் ஜி.எஸ்.டி. செலுத்த தொழிலாளிக்கு நோட்டீஸ்

கலெக்டர் அலுவலகத்தில் புகார்

திருப்பத்தூர், ஜன.20-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையை அடுத்த பாரிசம்பேட்டையை சேர்ந்த கூலித்தொழிலாளியான வெங்கடேசுக்கு ரூ.72½ லட்சம் ஜி.எஸ்.டி. வரி செலுத்தக்கோரி நோட்டீஸ் வந்ததால் அதிர்ச்சியடைந்தார். இந்த நிலையில் தனக்கு வந்த நோட்டீசுடன் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர்வு கூட்டத்துக்கு வந்த வெங்கடேசு, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமியிடம் மனு அளித்தார்.

அதில் "எனக்கு எந்தவித வியாபார தொடர்பும் இல்லை. மேலும் எந்தவித நிதி பரிவர்த்தனையும் இல்லை. எனது பான்கார்டு, ஆதார் கார்டு உள்ளிட்ட விவரங்களை யாரோ தவறாக பயன்படுத்தி வணிகம் செய்து உள்ளனர். எனவே இந்த மோசடியில் ஈடுபட்டவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறியிருந்தார்.

Indian Bank

இந்தியன் வங்கி

மண்டல அலுவலகம், வேலூர். 2வது தளம், 2வது கிழக்கு பிரதான சாலை தொலைபேசி எண்: 0416-2249620

குடியரசுத் தினக்கான அலுவலகத்தை சுத்தமாக்கு எடுப்பதற்கான டெண்டர்களை அழைக்கும் அறிவிப்பு

பொதுத்துறை வங்கியான இந்தியன் வங்கி 1906 சனி அன்று வரலாறான குடியரசுத் தினக்கு 'சுத்தமான' அலுவலகம் ஒன்றை நடைபாதையாக கட்டப்பட்ட / கட்டுமானத்தில் உள்ள அலுவலக வளாகங்களின் உரிமையாளர்களிடமிருந்து 2 ஏல முறையில் தொழிலாளர் மற்றும் நிதி சார்ந்த டெண்டர்களை அழைக்கிறது. தரைத்தளத்தில் வாகுட் ஸ்பேஸில் பார்க்கிங் வசதியுடன் 15 வரு. சுத்தமாக்கும் பணி கிளை அலுவலக நற்சேதுடன் வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் இருந்து 1 கி.மீ தொலைவில் அமைந்து இருக்க வேண்டும்.

டெண்டர் படிவங்களை பிப்ரவரி முதல்வரில் இருந்து 20.01.2026 முதல் 02.02.2026 வரை ரூ.250 திருப்பி செலுத்தாதது செலுத்தி இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம், வேலூர் என்ற முகவரிக்கு DGM/OI மூலம் பெறலாம். ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 02.02.2026 (நாளை 3 மணி). டெண்டர் மற்றும் டெண்டர் படிவங்களின் விவரங்களை எங்கள் வலைத்தளமான www.indianbank.bank.in இல் பெறலாம்.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து சலுகைகளையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

DGM | மண்டல மேலாளர்